FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

DSI 8213028

1. District : திண்டுக்கல் மாவட்டம் PS: அ.த.க.பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 16/2025 முத.அ. எண் Date: 24.12.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 22.12.2025 at 07.30 hrs நாள் வரை and 11.15 hrs,

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : 23.12.2025 at 16.40 hrs நேரம் வரை

(b) Information Received at PS. Date : 24.12.2025 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 09.15 hrs நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் - அலுவலகம், வடமதுரை சுமார் 15 கி.மீ - வடகிழக்கு.

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : — இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. கருப்பையா குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : பழனியப்பன் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 60 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — வழங்கப்பட்ட நாள் Place of Issue : — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் தொழில் (g) Address : கதவு எண். 1/109, அண்ணாநகர், மினாத்து - கிராமம், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் - மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. சுந்தர வேதா, உதவி வேளாண்மை அலுவலர், வடமதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: — குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. திருமலை

24/12/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.12.2025 - 11.45 hrs.

Name: பெயர் ப. பழனிச்சாமி,
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்.
அனல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:16/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 24.12.2025-ம் தேதி காலை சுமார் 09.15 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல், வேடசந்துர் தாலுகா, பிலாத்து கிராமம், ஆண்டிகுளம், கதவு எண்.1/109-ல் வசிக்கும் திரு.P.கருப்பையா, த/பெ.பழனியப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 10.15 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். திரு.P.கருப்பையா, வயது 60/2025, த/பெ.பழனியப்பன், கதவு எண்.1/109, ஆண்டிகுளம், பிலாத்து கிராமம், வேடசந்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் பெறுநர். உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக சுமார் 1.5 ஏக்கர் புன்செய் நிலமானது பிலாத்து கிராம சர்வே எண்.141, 148-ல் உள்ளது. அதில் குடும்பத்தோடு விவசாயம் செய்து வருகிறேன். விவசாயிகளுக்கு பாரத பிரதமரால் வழங்கப்படும் உதவித்தொகையை கடந்த மூன்று முறை தலா ரூ.2,000/- வீதம் எனது வங்கிக்கணக்கில் பெற்றிருந்தேன். அதன்பின்னர் அந்தப்பணம் என்னுடைய வங்கிக்கணக்கிற்கு அனுப்பப்படவில்லை. இது தொடர்பாக வடமதுரையிலுள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சென்று அங்கிருந்த உதவி விவசாய அலுவலர் திருமதி.சந்திரலேகா என்பவரை சந்தித்து விபரங்கள் கேட்டேன். அதற்கு அவர் அனைத்து விவசாய ஆவணங்களுடன் ஆதார், வங்கி கணக்கு, பட்டா ஆகியவை இணையதளத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்றும் அப்பொழுதுதான் அரசால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அனைத்து உதவித்தொகை மற்றும் திட்டப்பலன்களை பெற முடியும் என்றும் தெரிவித்தார். மேலும் எனது நிலத்திற்கு பட்டா வாங்கிக்கொண்டு வருமாறும் கூறினார். அதன்படி நானும் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து எனது நிலத்திற்கு என் பெயரில் பட்டா எண்.3817ஐ கடந்த நவம்பர் மாதம் பெற்றேன். அதன்பின்னர் கடந்த 10 நாட்களுக்கு முன்பு காலை சுமார் 11 மணியளவில் வடமதுரை விவசாய அலுவலகம் சென்று திருமதி.சந்திரலேகா அவர்களை சந்தித்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் எல்லா ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு பணம் ரூ.2,500/- லஞ்சமாக கொண்டு வாருங்கள் நிலம்

தொடர்பான ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடலாம் என்று கூறி லஞ்சமாக ரூ.2,500/- கேட்டார். நான் பணம் எதுவும் இல்லையென்பதால் பின்னர் வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்துவிட்டு 22.12.2025 காலை 07.30 மணிக்கு என்னுடைய மொபைல் எண்.8973567752 என்ற எண்ணிலிருந்து திருமதி.சந்திரலேகா அவர்களின் மொபைல் எண்.9944058090க்கு அழைத்து விபரங்கள் கேட்டேன். அதற்கு திருமதி.சந்திரலேகா அவர்கள் லஞ்சபணம் ரூ.2,500/- எடுத்துக்கொண்டு அலுவலகத்தில் சுமார் 11.00 மணிக்கு மேல் அவரை சந்திக்குமாறு கூறினார். அதன்படி நானும் 22.12.2025 காலை சுமார் 11.15 மணிக்கு வடமதுரையில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் சென்று திருமதி.சந்திரலேகா அவர்களை சந்தித்து நிலம் தொடர்பான ஆவணங்கள், வங்கி புத்தகம், பட்டா ஆகியவற்றின் விபரங்களை கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட திருமதி.சந்திரலேகா அவர்கள் அந்த ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து விவசாயிக்கான அடையாளஎண் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் லஞ்சமாக ரூ.2,500/- அவருக்கு கொடுத்தால்தான் செய்து தர முடியும் என்று கூறினார். நான் விவசாய வேலை செய்து வருவதால் அவ்வளவு பணம் இல்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.500/- குறைத்துக்கொண்டு ரூ.2,000/- லஞ்சமாக கொடுத்துவிடுங்கள் வேலையை முடித்து விடுகிறேன் என்றார். மேலும் பணத்துடன் 23.12.2025 காலை 10 மணிக்கு மேல் அவரது அலுவலகத்தில் வந்து அவரை சந்திக்குமாறும் கூறினார். நான் சரி என்று தெரிவித்து அங்கிருந்து வந்துவிட்டேன். பின்பு பணம் புரட்டமுடியாததால் அவரை பார்க்க அலுவலகம் செல்லவில்லை. பின்பு 23.12.2025 மாலை சுமார் 04.40 மணிக்கு திருமதி.சந்திரலேகா அவர்கள் அவரின் மொபைல் எண்.9944058090லிருந்து எனது மொபைல் எண் எண்.8973567752க்கு அழைத்து பணம் ரூ,2,000/-ம் கொண்டு வருவதாக சொன்னீங்களே இன்னும் கொண்டு வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் எனது மகனிடம் பணம் போட்டு விடச்சொல்லியிருக்கிறேன் போட்டதும் கொண்டு வருகிறேன் என்று கூறினேன். அதற்கு திருமதி.சந்திரலேகா அவர்கள் எனது மொபைல் எண்ணுக்கு கூட போடச்சொல்லுங்கள் என்று கூறினார். நான் அவரிடம் எனது மகனிடம் மொபைல் எண் சொல்லி பணம் போடச்சொல்ல தெரியாது எனவும், என் மகன் இன்று இரவுக்குள் பணம் போட்டதும் நாளை 24.12.2025ம் தேதி காலையில் பணம் ரூ.2,000/- கொண்டு வருவதாக

தெரிவித்தேன். சட்டப்பூர்வ பணியை செய்து தருவதற்காக ரூ.2,000/-ம் லஞ்சமாக கேட்கும் வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி விவசாய அலுவலர் திருமதி.சந்திரலேகா அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். எனக்கு எழுத படிக்கத்தெரியாது. இந்த புகாரை தெரிந்த ஒருவரை வைத்து தயார் செய்து கொண்டு வந்தேன். இந்த புகாருடன் எனது பெயரில் தாக்கலான பட்டா எண்.3817-ன் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் உதவி விவசாய அலுவலர் திருமதி.சந்திரலேகா அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,000/-ம் கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (P.கருப்பையா, 24.12.2025).

Sir, Received the complaint on 24.12.2025 at 09.15hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.16/2025, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 10.15 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 24.12.2025).

Original FIR along with Computer Typed complaint of Tr.P.Karuppaiya, Age.60/2025, S/o.Palaniyappan, D.No.1/109, Andikulam, Pilathu Village, Vedasandur Taluk, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Palanisamy), 24/12/25
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul